# மாலைக்கதிர்
Maalaikkathir


சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 25 வியாழக்கிழமை 09.01.2025 கதிர் 91







# ஞானசார தேரருக்குச் சிறைத்தண்டனை



இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாத சிறைத்தண்டனையை இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

அத்துடன், 1,500 ரூபா அபராதம் விதிப்பதாகவும் தீர்ப்பை அறிவித்து கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன உத்தரவிட்டுள்ளார்.

குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமையால் முன்னர் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அடுத்தே அவருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி கிருலப்பனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், "இஸ்லாம் ஒரு புற்றுநோய். அதைத் துடைத்தெறிய வேண்டும்." -

7➤

# இன,மத வன்முறைக்கு இனிமேல் இடமேயில்லை



## அதை மீண்டும் தூண்ட முயல்வோருக்கு சிறைதான் வாழ்க்கை என்கிறார் பிரதமர்

"இலங்கையில் இனிமேல் இன, மத அவமதிப்புகளுக்கு, வன்முறைகளுக்கு இடமேயில்லை." – என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

"இங்கு இன, மத வன்முறைகளை மீண்டும் தூண்ட முயல்வோர் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்படுவார்கள்." – என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார

7➤

# ஒரு இலட்சம் குடியேறிகள் இலங்கைக்குள்

## புலனாய்வுத்துறை எச்சரிக்கை



இலங்கைக்குள் அடுத்து வரும் நாள்களில் ஒரு இலட்சம் வரையான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் நுழையக்கூடும் என்று புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

7➤




# ஹயஸ் மோதி ஒருவர் மரணம்

## யாழில் சோகம்

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தூரில் இருந்து சுன்னாகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் வாகனம், பலாலியில்

7➤



# புற்றளை இளைஞர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் வல்லைப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை, புற்றளைப் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மணிகண்டன்

7➤

# பொத்துவிலில் கோர விபத்து! மாற்றுத்திறனாளி ஒருவர் பலி!!



மாற்றுத்திறனாளியான வயோதிபர் ஒருவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் .

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம், பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்றது .

கோமாரியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளியான மென்டிஸ் அப்பு விஜயஸ்ரீ (வயது 71 ) என்ற வயோதிபரே விபத்தில் பலியானார்.

பல வருடங்களாக அவர் பிரதான வீதியில் கோமாரி மகா வித்தியாலயத்திற்கும் தபாலகத்திற்கும் இடையே உள்ள மரத்தின் கீழ் மூன்று சக்கர சைக்கிளில் வந்து நிற் பது வழக்கம். செருப்புத் தைப்பதும் குடை திருத்துவதும் அவரின் தொழில் ஆகும்.

இரண்டு கால்களும் இயலாத மாற்றுத்திறனாளியான அவர் மூன்று சக்கர

7➤

# கோப் குழுவின் தலைவரானார் நிஷாந்த சமரவீர



அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக தேசிய மக்கள் சக்தியின்

7➤

# 10 இந்திய மீனவர்கள் சிறைப்பிடிப்பு



இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் கடலோரப் பொலிஸ் படையினர் நேற்று இரவு யாழ். - காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்தில் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போதே இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளின் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளைக் கட்டுப்படுத்த கடற்படை மற்றும்

7➤

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்



அஹுங்கல்ல பகுதி யில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர்

7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மரக்கடத்தல் முறியடிப்பு



கொழும்பு, ஜன 09

வவுனியா, மரக்காரம்பளையில் மரக்கடத்தலை முறியடியத்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் சந்தேதகத்துக்கிடமாக மரங்களை ஏற்றிச் சென்ற ஜீப் ரக வாகனத்தை நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திவுல்வெவ தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸார் சோதனை செய்த போது சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான 72 மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், மரக்கடத்தலுக்குப் பயன்படுத்திய ஜீப் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஒதுக்கீட்டு சட்டமூலம் இன்று



கொழும்பு, ஜன 09

2025 ஆம் ஆண்டுக்கான முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காக இன்று பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

இரண்டாவது வாசிப்பு எனப்படும் பாதீட்டு உரை எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஐ)

## மீனவர்கள் 12 பேருக்கும் நிபந்தனை பிணை



கொழும்பு, ஜன 09

தடை செய்யப்பட்ட இழுவைப்படகை பயன்படுத்தி கடந்த வருடம் நவம்பர் 11ம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி, மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர், கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யும் நடவடிக்கையின் போது கடற்படை உத்தியோகத்தர்களை தாக்கி கடமைக்கு இடையூறு விளைவித்தது, கடற்படை படகை சேதப்படுத்தியது, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை கடந்த நவம்பர் 27ம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டி, தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் நிபந்தனையுடன் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் கடற்படை உத்தியோகத்தர்களை தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரினால் மேற்கொண்ட வழக்கில் விளக்கமறியலில் மீனவர்கள் 12 பேரும் 2025 ஜனவரி 08ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் இந்திய மீனவ படகு ஓட்டிக்கு 8 மாத கடூழிய சிறையும் ஏனைய 11 மீனவர்களுக்கு ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனையை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனை அடிப்படையில் விடுவித்து உத்தரவிட்டுள்ளார். படகு அரசுடமையாக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பதிவு செய்யப்படாத கைபேசிகளுக்கு தடை



கொழும்பு, ஜன 09

எதிர்காலத்தில் இலங்கையில், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கைக்குள் சட்டவிரோதமான முறையில் தொடர்பாடல் உபகரணங்களை கொண்டு வருவதை தடுப்பதே இதன் நோக்கம் என அதன் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் பந்துல ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதோடு அதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை இம்மாத இறுதிக்குள் அறிமுகப்படுத்த இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், தற்போது பாவனையில் உள்ள கையடக்க தொலைபேசிகளுக்கு இந்த புதிய வேலைத்திட்டம் இடையூறு ஏற்படுத்தாது எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சட்டவிரோதமான தகவல் தொடர்பு சாதனங்களை முறையான தரம் இன்றி கொள்வனவு செய்வதன் மூலம் நாட்டு மக்கள் பல்வேறு சிரமங்களுக்கும் இடையூறுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

நாட்டின் நுகர்வோருக்கு இதுபோன்ற உபகரணங்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பது எங்கள் நிறுவனத்தின் முக்கிய பொறுப்பாகும். இதற்காக இம்மாத இறுதியில் தானியங்கி முறையை அமுல்படுத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை இந்த அமைப்பில், தற்போது பயன்படுத்தப்படும் மொபைல் போன்கள் தடுக்கப்படவில்லை மற்றும் வெளிநாட்டவர்கள் பாவிக்கும் மொபைல் போன்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கவில்லை எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (ஐ)

## மீனவருக்கு அடித்த அதிஸ்டம்



கொழும்பு, ஜன 09

முல்லைத்தீவில் தென்பகுதி மீனவரின் கரைவலையில் பெரும தொகை திருக்கை மீன்கள் அகப்பட்டுள்ளது.

நேற்று மாலை முல்லைத்தீவு கடலில் கரைவலை மூலம் 8000ம் கிலோ திருக்கை மீன் பிடிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து வந்து முல்லைத்தீவில் தங்கியிருந்து தொழில் செய்யும் மீனவரின் கரைவலையிலே இவ்வாறு திருக்கைமீன்கள் கொத்தாக வந்து சிக்கிக்கொண்டுள்ளது.

இந்நிலையில் பெரும் தொகை மீன்கள் ஒரேநேரத்தில் சிக்கியதால் மீனவர் பெரும் மகிழ்ச்சியடைதுள்ளதாக கூறப்படுகின்றது. (ஐ)

# இந்திய இழுவைப் படகு அடாவடி யாழ். மீனவரின் வலைகள் நாசம்



கொழும்பு, ஜன 09

இலங்கை கடற்பரப்பில் புதன்கிழமை இரவன்று இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி உள்நுழைந்து, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமையால் யாழ்ப்பாணம் சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவர் ஒருவரின் சுமார் ஏழு இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

திருவடிநிலை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் குறித்த மீனவர், புதன்கிழமை (08) இரவு ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் அவரது வலைகளை அறுத்து உள்ளன. இதனால் அவரிடம் இருந்து 32 வலைகளில் 26 வலைகள் அறுக்கப்பட்ட நிலையில் ஆறு வலைகளே மீதமாகின. எஞ்சிய வலைகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

புதன்கிழமை இரவு 10 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ரோலர்கள் எமது வலையை மட்டுமல்லாமல் வேறு சங்கங்களின் வலைகளையும் அறுத்து உள்ளன. இப்பொழுது மீன்பிடி பருவ காலம். இந்திய இழுவை படகுகளின் இவ்வாறான செயற்பாடுகளால் நாங்கள் உழைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவித்துள்ளார்.

ஏழு இலட்சம் ரூபாய் வங்கியில் கடன் பெற்று, இந்த வலை முதல்களை உருவாக்கி கடலில் தொழில் செய்தேன். எனது வலைகளை இந்திய இழுவைப் படகு அறுத்துச் சென்றதால் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வேன், வங்கி கடனை செலுத்த என்ன செய்வேன் என்று தெரியாமல் தவிக்கின்றேன் என்றார்.

புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி பல நல்ல வேலைத் திட்டங்களை செய்கிறார். அதுபோல, இந்திய மீனவர்கள் பிரச்சினையையும் தீர்த்து வையுங்கள். புதிதாக வந்த அமைச்சர் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அரசாங்கம் எனக்கு இழப்பீட்டினை வழங்கி, நான் மீண்டும் தொழில் செய்ய வழிவகுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 19,800 'பிளாட்டினம்' சிகரெட்டுடன் ஒருவர் சிக்கினார்



கொழும்பு, ஜன 09

சுமார் ரூ.29.7 மில்லியன் மதிப்புள்ள வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளியே கொண்டு சென்ற பயணி ஒருவர், வியாழக்கிழமை இரவுவிமான நிலைய போதைப் பொருள் பணியகத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

புத்தளம், வேப்பமடுவில் வசிக்கும் 34 வயதான இவர், துபாயில் இரண்டு வருட காலப் பணியை முடித்துக் கொண்டு இலங்கைக்குத் திரும்பினார்.

துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் ஈகு-652 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை அன்றிரவு 7.30 மணியளவில் வந்தடைந்தார்.

அவர் தனது பயணப் பையில் 19,800 வெளிநாட்டுத் தயாரிப்பு "பிளாட்டினம்" சிகரெட்டுகள் அடங்கிய 99 சிகரெட் அட்டைப்பெட்டிகளை மறைத்து வைத்திருந்தபோது, போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பயணி பொலிஸ் பிணையில், விடுவிக்கப்பட்டுள்ளார், மேலும் அவரும் அவர் சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வந்த சிகரெட்களும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 15ஆம் திகதியன்று முன நிலைப்படுத்தவுள்ளன. (ஐ)

## HMPV தொற்றுகள் பதிவாகவில்லை



கொழும்பு, ஜன 09

சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது போல், இலங்கையில் எச்எம்பிவி தொற்றுகள் எவையும் அண்மையில் கண்டறியப்படவில்லை எனக் கூறிய சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ, சுகாதார அமைச்சு இவ்விடயம் குறித்து விழிப்புடன் இருப்பதாகவும், நாட்டில் வைரஸால் பாதிகக்பட்ட நபர் கண்டறியப்பட்டால் மக்களுக்கு அறிவிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

வைரஸ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இருபது இடங்கள் பெயரிடப்பட்டுள்ளதாகவும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொற்று நோய் தடுப்புப் பிரிவு தொடர்ந்தும் சுகாதார அமைச்சுக்கு வைரஸ் தொடர்பான விவரங்களை வழங்கி வருவதாகவும், ஜனாதிபதியும் இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சந்தேகத்திற்கிடமான ஒரு வழக்கு பதிவாகியது, ஆனால் சோதனையை மேற கொண்ட போது எதிர்மறையான முடிவே வந்தது என்று அமைச்சர் கூறினார்.

சில காலங்களுக்கு முன்னர் இலங்கையில் HMPV நோய் கண்டறியப்பட்டதாக கூறிய நோயெதிர்ப்பு நிபுணர் பேராசிரியர் நீலிகா மாளவிகேவின் கருத்தை சில ஊடகங்கள் தவறாக மேற்கோள் காட்டியுள்ளதாகவும், உணர்ச்சிகரமான விடயங்களைப் அறிக்கையிடும் போது ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ஐ)

## உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி ஆரம்பமாகிறது



கொழும்பு, ஜன 09

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் முதன் முதலில் நடைபெற உள்ள உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி கொழும்பில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சியை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நெதர்லாந்து தூதரகத்துடன் இணைந்து நடத்துகிறது.

கொழும்பில் ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை காலை 10.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை கட்டணமின்றி இலவசமாக பார்வையிடலாம்.

யாழ்ப்பாணத்தில் கலாச்சார மண்டபத்தில் இம்மாதம் 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையும், காலியில் மாநகர சபையில் இம்மாதம் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி வரை கண்காட்சியை இலவசமாக பார்வையிடலாம்.

இலங்கையில் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு புதன்கிழமை (08) கொழும்பிலுள்ள சினமன் லைப் ஹோட்டலில் நடைபெற்றது.

ஊடக சந்திப்பில் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பட்ச், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைவர் குமார் நடேசன், உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி முகாமையாளர் மற்றும் கண்காணிப்பாளர் மார்தா எச்செவர்ரியா கோன்சலஸ் மற்றும் சினமன் லைப் ஹோட்டல் சந்தைப்படுத்தல் பிரிவு பணிப்பாளர் ரதிஷா தளுவத்தை ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## அரிசி தட்டுப்பாட்டுக்கு கடந்த அரசாங்கமே காரணம்



கொழும்பு, ஜன 09

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், கடந்த அரசாங்கத்தினால் ஒருவருக்கு தலா 20 கிலோ அரிசி இலவசமாக விநியோகம் செய்யப்பட்டதன் விளைவாக சந்தையில் சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என, வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று தெரிவித்தார்.

சிவப்பு அரிசி சாப்பிடாத மக்களுக்கு கூட கடந்த அரசாங்கம் சிவப்பு அரிசியை வழங்கியதாக அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"சந்தையில் சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கடந்த அரசாங்கம் 20 கிலோ அரிசியை மக்களுக்கு விநியோகித்ததே தட்டுப்பாட்டுக்கு காரணம். சிவப்பு அரிசி சாப்பிடாத மக்களுக்கும் சிவப்பு அரிசி விநியோகிக்கப் பட்டுள்ளது. " என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார். (ஐ)

# டெல்லியில் பாடாசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பரபரப்பு!




டெல்லியில் உள்ள பல பாடசாலைகளுக்கு மின்னஞ்சல்கள் ஊடாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வசந்த் விஹார் மற்றும் ஆர்.கே. புரம் ஆகிய இடங்களில் உள்ள டெல்லி பப்ளிக் பாடசாலை , ப்ளூ பெல்ஸ் மற்றும் தாகூர் இன்டர்நேஷனல் ஆகிய பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படட்டதாக பொலிஸ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். முன்னதாக நகரில் உள்ள பல பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட போலி வெடிகுண்டு மிரட்டல்களைப் போலவே, இந்த மிரட்டல்கள் குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் பாடசாலை வளாகத்தில் ஏராளமான வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாக மின்னஞ்சல்களில் குறிப்பிடப்பட்டதோடு, "பாடசாலைகளுக்கு நுழையும் மாணவர்களின் பைகளை நீங்கள் கடுமையாக சரிபார்க்காதது எங்கள் திட்டத்தை நிறைவேற்ற சரியான வாய்ப்பை எங்களுக்கு வழங்கியுள்ளது" என்றும் குறித்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டு இருந்ததாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் தேசிய தலைநகரில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இதேபோன்ற வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தன,பின்னர் அவை புரளியாக மாறியதாகவும் பொலிஸார் இதன்போது தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதனையடுத்து கடந்த டிசம்பர் 14 ஆம் திகதி , டெல்லி பொலிஸ் சிறப்புப் பிரிவு, பஸ்சிம் விஹார் பாடசாலைக்கு வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பிய நபர் ஒரு தனியார் பாடசாலையின் மாணவர் என்பதை இனங்கண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விண்கலன்களை இணைக்கும் நிகழ்வை மீண்டும் ஒத்திவைத்தது இஸ்ரோ!



இஸ்ரோ இரு விண்கலன்களை ஒருங்கிணைக்கும் ஆய்வுப்பணி ஜனவரி 9-ம் திகதி காலை 8 மணி முதல் நடைபெறும் என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதற்கான நிகழ்வை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு செயற்கைக்கோள்களை விண்வெளியில் இணைக்கும் முயற்சியில் இஸ்ரோ தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக கடந்த 30-ம் திகதி தலா 220 கிலோ எடை கொண்ட சேஸர், டார்கெட் ஆகிய விண்கலன்களை உள்ளடக்கிய ஸ்பேடெக்ஸ் விண்கலன்கள், பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அத்துடன் 24 ஆய்வுக்கருவிகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த இரு விண்கலன்களும் பூமியில் இருந்து 475 கி.மீ. சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றின் தொலைவில் படிப்படியாக 20 கி.மீ. குறைக்கப்பட்டு அவை ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைக்கப்படவுள்ளன.

இந்நிலையில், விண்கலன்களை விண்வெளியில் ஒருங்கிணைப்பதில் தற்காலிகமாக சிக்கல் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்படுவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. சில தொழில்நுட்ப இடையூறுகள் காரணமாக திட்டமிட்டபடி விண்கலன்கள் இணையும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 6 ஆக உயர்ந்த திருப்பதி கூட்ட நெரிசல் பலி எண்ணிக்கை!



திருப்பதியில் பக்தர்கள் குவிந்ததால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் பலியானோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளதாக தகவல்கள் வெளியாகின.


திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி பண்டிகைக்காக சொர்க்கவாசல் திறக்கப்படுவது வழக்கம். இன்று சொர்க்கவாசல் திறப்பை முன்னிட்டு இலவச தரிசன டோக்கன் விநியோகம் செய்யப்பட்டது.

இந்த இலவச தரிசன டோக்கனை வாங்குவதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்ததால் அங்கு கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இந்த கூட்ட நெரிசலில் சிக்கி சேலத்தை சேர்ந்த மல்லிகா என்ற பெண் பலியானார் என முதல் கட்ட தகவல் வெளியானது. மேலும் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை தற்போது 6 ஆக அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளை தொடர்பு கொண்டு விசாரித்தார். பாதிப்பு அடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளையும், உயர்தர சிகிச்சைகளையும் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு நாளை திருப்பதி வருகிறார் என திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஆம் ஆத்மிக்கு திரிணாமுல் ஆதரவு: மம்தா பானர்ஜிக்கு நன்றி தெரிவித்த கெஜ்ரிவால்!

டெல்லி சட்ட சபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சிக்கு சமாஜ்வாதி கட்சி ஆதரவு அளிப்பதாக அறிவித்ததையடுத்து சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவிற்கு கெஜ்ரிவால் நன்றி தெரிவித்துள்ளார்.

டெல்லி சட்டசபை மொத்தம் 70 உறுப்பினர்களை கொண்டது. டெல்லி சட்டசபைக்கு பெப்ரவரி 5-ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையர் இராஜீவ்குமார் அறிவித்தார்.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் பிப்ரவரி 8-ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதற்கிடையே, டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சிக்கு திரிணமுல் காங்கிரஸ் கட்சி ஆதரவு அளிக்கிறது என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறினார்.

இதையடுத்து காங் கிரஸ், ஆம் ஆத்மி, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் தேர்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சிக்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆதரவு அளிப்பதாக அறிவித்தது. இதனால் திரிணாமுல் கட்சி தலைவர் மம்தா பானர்ஜிக்கு கெஜ்ரிவால் நன்றி தெரிவித்தார்.

இதுதொடர்பாக, கெஜ்ரிவால் எக்ஸ் வலைதளத்தில் நன்றி தெரிவித்துள்ள செய்தியில், டெல்லி தேர்தலில் ஆம் ஆத்மி. கட்சிக்கு ஆதரவளித்த மேற்கு வங்க முதல் மந்திரி மம்தாவுக்கு நன்றி.

நீங்கள் நல்ல நேரத்திலும், சிக்கலான நேரத்திலும் எப்போதும் ஆதரவாகவும், ஆசியும் அளித்து உறுதுணையாக இருந்துள்ளீர்கள் நன்றி என பதிவிட்டுள்ளார்.



# மறக்கப்பட்ட வழக்கங்கள் மீண்டும் உயிர்பெறுமா?

தமிழ் கலாசாரத்தில் பல திருமண வழக்கங்கள் காலப்போக்கில் மறைந்துவிட்டன. இந்த நவீன யுகத்தில், நம் பாரம்பரியத்தை மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

நம் பாரம்பரிய வழக்கங்களே தாய்மொழியின் பெருமையையும், அதன் தொன்மையையும் நிலைலநிறுத்துகின்றன.

தமிழ் கலாசாரத்தின் திருமண வழக்கங்கள் அதன் தனித்தன்மையை வெளிப்படுத்தும். மங்கலமணி



இசைக்கும் முன் வெண்ணெய்சட்டியில் தீபம் ஏற்றுவது, கள்ளாலுகி பாங்கிடுவது, திருக்கண்ணாடியில் மாலைகள் பரிமாறுதல் போன்றவை தற்போதைய தலைமுறையால் அறியப்படாமல் போன பழங்கால வழக்கங்களில் சில. மேலும், திருமணத்தின் போது மாங்கல்ய தாரத்தின் முக்கியத்துவம், 'ஓங்கார' பாட்டின் இசை, 'காப்பு கட்டுதல்' போன்றவை இந்த வழக்கங்களின் முக்கிய பகுதியாகும்.

காலப்போக்கில் மறைந்துபோன பல வழக்கங்களை மீண்டும் கற்றுக் கொள்வது அவசியமாகிறது. உதாரணமாக, 'நோன்பு' எனப்படும் வரலாற்று வழக்கு, இளம் பெண்கள் விரதமிருந்தபின், திருமணத்துக்கு முன் செய்யப்படும் பூஜைகள் போன்றவை இன்றைய தலைமுறைக்கு தெரியாமல் போனவற்றில் முக்கியமானது. மேலும், 'அஷ்டலட்சுமி பூஜை', 'அதிசய மான சுழற்சி', 'கன்னியாணா காய்ச்சி பச்சிலை அறுத்தல்' போன்ற முக்கியமான பழங்கால வழக்கங்களையும் மீண்டும் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.

இந்த மறக்கப்பட்ட வழக்கங்களை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும்என்று பல வரலாற்றாய்வாளர்கள் வலியுறுத்துகிறார்கள். "இந்த வழக்கங்கள் நம் கலாசாரத்தின் அடையாளம். இவற்றை மீண்டும் பின்பற்றுவதன் மூலம், நம் தலைமுறையினருக்கு நம் பாரம்பரியத்தை அறிமுகப்படுத்தலாம்," என வரலாற்றாய்வாளர் செந்தில் கூறுகிறார். மேலும், "இந்த வழக்கங்கள் நம் சமூகத்தின் ஒருங்கிணைப்புக்கு முக்கியமானவை. இவற்றை மீண்டும் கற்றுக் கொள்வது நம் சமூகத்தை மேலும் உறுதியானதாக்கும்," என வரலாற்றாய்வாளர் லாவண்யா தெரிவித்துள்ள

பல கலாசார பாதுகாப்பாளர்கள் இந்த வழக்கங்களை மீண்டும் வெளிச்சத்துக்கு கொண்டுவர வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நமது முன்னோர்களின் பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப்பிக்க, இவ்வழக்கங்களை திருமணங்களில் பின்பற்றுவதை ஊக்குவிக்க வேண்டும். மேலும், இந்த வழக்கங்களை மீண்டும் பின்பற்றுவதன் மூலம், நமது கலாசாரத்தை மற்ற உலகமக்களிடமும் பெருமையாகக் காட்ட முடியும்.

### மீண்டும் பின்பற்ற வேண்டிய முக்கிய வழக்கங்கள்

மறக்கப்பட்ட பழங்கால திருமண வழக்கங்களில் முக்கியமானவை பல. 'கோலங்களின் அலங்காரம்', 'பள்ளிக்கொடி நாட்டுதல்', 'மணமக்களை வழப்படுத்தும் விநாயகர் பூஜை' போன்ற வழக்கங்களை மீண்டும் பின்பற்றுவதன் மூலம், திருமண விழா மேலும் சிறப்புறும். மேலும், 'பால்குடம் ஏந்துதல்', 'திருமணதிவாலம்', 'தாம்பூல பரிமாற்றம்' போன்றவை நம் கலாசாரத்தின் அழகிய தருணங்களை வெளிப்படுத்துகின்றன.

நம் கலாசாரத்தின் விழுமியத்தை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல, இவ்வழக்கங்களை மீண்டும் பின்பற்றுவது அவசியமாகிறது. இவற்றின் மூலமாக, நம் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீண்டும்நிலைநாட்ட முடியும். மேலும், இவ்வழக்கங்கள் நம் கலாசாரத்தை மற்ற கலாசாரங்களிடமும் பெருமையாக காட்டும்.

மறக்கப்பட்ட பழங்கால தமிழ் திருமண வழக்கங்களை மீண்டும் உயிர்ப்பிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக, நம் வர லாற்றாய்வாளர்கள் மற்றும் கலாசார பாதுகாப்பாளர்கள் இணைந்து செயற்படுகிறார்கள். நம் கலாசாரத்தின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட, இவ்வழக்கங்களை மீண்டும் பின்பற்றுவோம். இவ்வாறு, மறக்கப்பட்ட தமிழ் திருமண வழக்கங்களை (Tamil wedding traditions) மீண்டும் உயிர்ப்பிக்க அவசியம் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது நம் கலாசாரத்தின் பெருமையை மேலும் உயர்த்தும்.

> "நம் கலாசாரத்தின் விழுமியத்தை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல, இவ் வழக்கங்களை மீண்டும் பின்பற்றுவது அவசியமாகிறது. இவற்றின் மூலமாக, நம் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீண்டும் நிலைநாட்ட முடியும். மேலும், இவ்வழக்கங்கள் நம் கலாசாரத்தை மற்ற கலாசாரங்களிடமும் பெருமையாக காட்டும்."





# குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிப்பதில் சீனா, ஜப்பானுடன் இணைந்த ரஷ்யா!



குறைந்து வரும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் முயற்சியில் சீனா மற்றும் ஜப்பானுடன் ரஷ்யா இணைந்துள்ளது. இதேவேளை மக்கள் தொகை வளர்ச்சியை அதிகரிக்க சில திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, இளம்பெண்கள் குடும்பங்களைத் தொடங்க ஊக்குவிக்கும் முயற்சியில் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கும் 25 வயதுக்குட்பட்ட பெண் மாணவர்களுக்கு 100,000 ரூபிள் (இந்திய மதிப்பில் ரூ.81,000) கணிசமான ஊக்கத்தொகையை ரஷ்ய அரசு வழங்குகிறது.

இந்த திட்டத்திற்கு தகுதி பெற, விண்ணப்பதாரர்கள் உள்ளூர் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் முழுநேர மாணவர்களாகவும், 25 வயதுக்குட்பட்டவர்களாகவும், கரேலியாவில் வசிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

இறந்து பிறக்கும் குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கு இந்த ஊக்கத்தொகை கிடைக்காது என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும், திடீரென நோய் பாதிப்பு காரணமாக குழந்தை இறந்துவிட்டால் ஊக்கத்தொகை இரத்து செய்யப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மேலும், ஊனமுற்ற குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இளம் தாய்மார்கள் இந்த திட்டத்திற்கு தகுதியுடையவர்களா என்பதை குறிப்பிடவில்லை, மேலும் குழந்தை பராமரிப்பு மற்றும் பிரசவத்திற்குப் பிறகான செலவுகளுக்கு உதவ கூடுதல் தொகையை பெறுவார்களா என்பதையும் குறிப்பிடவில்லை.

இதனிடையே, ரஷ்யாவின் வரலாற்றில் பிறப்பு விகிதம் மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 5,99,600 குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளன. இது 25 ஆண்டுகளில் மிகக் குறைந்த பிறப்பு எண்ணிக்கையும், 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட 16,000 குறைவாகவும் உள்ளது.

## அமெரிக்கா – கனடா இணைப்பு சர்ச்சையில் ஜஸ்டின் ட்ரூடோவை கிண்டல் செய்த எலான் மஸ்க்!





கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 'கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வாய்ப்பில்லை' என தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவுக்கு எலான் மஸ்க் கிண்டலாக பதில் அளித்துள்ள சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க அதிபராக எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி டொனால்டு டிரம்ப் பதவி ஏற்கவுள்ள நிலையில் கனடாவை அமெரிக்காவின் 51 வது மாகாணமாக இணைக்க முனைப்பு காட்டி வரும் டிரம்ப் அதற்காக அந்நாட்டின் மீது பொருளாதார அழுத்தத்தை கொடுப்பேன் என்றும் அச்சுறுத்தியுள்ளார். அமெரிக்கக் கொடியால்வரையப்பட்ட இரு நாடுகளின் ஒருங்கிணைந்த வரைபடத்தையும் அவர் பகிர்ந்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் முன்னதாக கனடா பிரதமர் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, டிரம்புக்கு ஆதரவாக சமூக ஊடகத்தில் களமிறங்கிய எலான் மஸ்க், ஜஸ்டின் ட்ரூடோவின் இந்த எக்ஸ் பதிவிற்கு "பெண்ணே, இனிமேல் நீங்கள் கனடாவின் கவர்னராக இருக்க போவதில்லை. ஆகவே நீங்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை" என்று பதிவிட்டுள்ளார்.

கனடா பிரதமராக கடந்த 9 ஆண்டுகள் பதவி வகித்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக கடந்த ஜனவரி 6ஆம் திகதி அறிவித்தார். புதிய லிபரல் கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் போது பதவியை ராஜினாமா செய்வதாக அவர் அறிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத்தீ மேலும் ஐந்து பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத்தீ வேகமாக பரவி வருவதை அடுத்து மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த காட்டுத்தீ லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் கடற்கரை பகுதியில் இந்த காட்டுத்தீ முதலில் பரவ ஆரம்பித்துள்ளது. கடற்கரை பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால், காட்டுத்தீ மலைப்பகுதிகளுக்கு வேகமாக பரவி வருகிறது.

இதனால் அங்கு கடும் புகைமூட்டம் நிலவி வருகிறது. காட்டுத்தீயில் சிக்கி ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள், வாகனங்கள் நாசமாகின. காட்டுத் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகிறார்கள். அப்பகுதி வீடுகளில் வசித்து வந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


மேலும், சுமார் 30 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டியில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மின்சாரம் இல்லாமல் தவித்து வருகிறார்கள். காட்டுத்தீ காரணமாக சுமார் ஒரு லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டனர். காட்டுத்தீயால் 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காற்றின் வேகம் குறையாததால் கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்படுவதாக ஆளுநர் கவின் நியூசம் தெரிவித்துள்ளார். நேற்றிரவு காற்றின் வேகம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் , இன்று வரை நிலைமை மோசமாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி தீயணைப்புத் துறையினர் கூறும் போது, "எங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்கிறோம். ஆனால், இத்தகைய காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கு தேவையான தீயணைப்பு வீரர்கள் அனைத்து துறைகளிலும் இல்லை," என்று தெரிவித்தார்.

## உக்ரைன் மீது வான்வழி தாக்குதல் நடத்திய ரஷ்யா – 13 பேர் உயிரிழப்பு!





உக்ரைன் நாட்டின் ஜபோரிஜியாவில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் கிட்டத்தட்ட 13 பேர் உயிரிழந்ததுடன் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என சர்தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த தாக்குதல் மற்றும் உயிரிழப்பு குறித்து உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தகவல் தெரிவித்ததோடு மேலும், உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு இரங்கல் செய்தியும் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் அவர் பகிர்ந்துள்ள காணொளியில் , காயம் அடைந்த மக்கள் சாலையிலேயே அவசர படையினர் முதலுதவி சிகிச்சை அளிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், தீயணைப்புத் துறையினர் தீயை கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் காட்சிகளும் இடம்பெற்று இருக்கின்றன.

இத்துடன், "ரஷ்யர்கள் ஜபோரிஜியா மீது வான்வழி குண்டுகளை வீசி தாக்கினர். இது நகரத்தின் மீது வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல். இதுவரை ஆயிரக்கனக்கான கணக்கான மக்கள் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. அனைவருக்கும் தேவையான உதவிகள் செய்யப்படுகின்றன. துரதிர்ஷ்டவசமாக, 13 பேர் கொல்லப்பட்டனர்."

"அவர்களின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கல்கள். துரதிர்ஷ்டவசமாக, உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அறிந்தும், ஒரு நகரத்தின் மீது வான்வழி குண்டுகளை வீசுவதை விட கொடூரமானது எதுவும் இல்லை."

"ரஷ்யா அதன் பயங்கரவாதத்திற்காக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். உக்ரைனில் உயிர்களைப் பாதுகாக்கும் முயற்சிகள் ஆதரிக்கப்பட வேண்டும். வலிமையின் மூலம் மட்டுமே அத்தகைய போரை நீடித்த அமைதியுடன் முடிவுக்குக் கொண்டுவர முடியும்," எனவும் மேலும் அவர் தனது பதிவில் கூறியுள்ளார்.

# நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பு





கொழும்பு, ஜன 09

இரண்டு புதிய மேல் நீதிமன்ற நீதிபதி கள் இன்று காலை ஜனாதி-பதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் பதவியேற்றனர்.

அதன்படி, சட்டத்தரணி கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் சட்டத்-தரணி ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார். (ஐ)

# இவ்வருடத்துக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் பிரதமரால் சமர்ப்பிப்பு



2025 ஆம் ஆண்டுக்கான முன்கூட்-டிய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் நாடாளுமன்றத்தில் இன்று முன்வைக்கப்பட்டது.

இதன்படி, இந்த வருடத்துக்கான அரச செலவீனம் 4 ஆயிரத்து 218 பில்லியன் 248 மில்லியன் 18 ஆயிரம் ரூபாவாகும்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு அமைய, ஜனாதிபதி செயல்முறை திட்டத்தின் மீண்டுவரும் செலவீனம் 2 ஆயிரத்து 518 மில்லியன் ரூபாவாகும்.

அத்துடன் மூலதனச் செலவீனம் 354 மில்லியன் ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்துக்கான பாதீட்டு திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

பாதீட்டு திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான 7 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாதீட்டு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பின்னர் குழு நிலை விவாதம் பெ-ப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன் மார்ச் 21ஆம் திகதி மாலை 6 மணியளவில் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதேவேளை, புதிதாக வேட்புமனு-க்களை பெற்று உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்துவதற்கான விசேட ஏற்பாடுகளுடனான சட்டமூலம் இன்று நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

# அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

கொழும்பு, ஜன 09

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்-தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்கப்படும் என தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கரு-ணாநாயக்க இன்று கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் சர்வதேச நாணய நிதியத்-திற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

“25,000 ரூபாய் என்றி இல்லை, நாங்கள் இலக்கத்தினை பார்க்க மாட்டோம். யாரும் இதற்கு பதறத் தேவையும் இல்லை. இந்த நாட்டில் உள்ள அரச ஊழியர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டு செப்டெம்பர் 4 ஆம் திகதி தபால் மூல வாக்கெடுப்புக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை தீர்மானம் ஒன்றை எடுத்தார்.

ஆனால் அரசு ஊழியர்கள் நல்ல பதில் அளித்தனர். இது பொது ஊழியர்களை ஏமாற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட ஒன்று, உண்மை அல்ல எனவும் அவர் கூறினார். (ஐ)

# உயர் நீதிமன்ற செயற்பாடுகள் இடமாற்றம்

கொழும்பு, ஜன 09

உயர்நீதிமன்ற வளாகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் காரணமாக, 2025 ஜனவரி 15 முதல் கொழும்பு 12 இன் அதிகார மாவத்தையில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு உயர் நீதிமன்ற செயற்பாடுகள், தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

இதற்கிடையில், ஜனவரி 15 முதல் பழைய நீதி அமைச்சக கட்டிடத்தில் அமைந்துள்ள புதிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தில், மேல்முறையீட்டு நீதி மன்றம் மீண்டும் அமர்வுகளை ஆரம்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட வசதிகள் தொடர்பாக பொதுமக்கள், சட்டத்தரணிகளுக்கு ஏற்படும் ஏதேனும் சிரமத்திற்கு உயர் நீதிமன்றத்தின் மார்ஷல்ஸ் அலுவலகம் வருத்தம் தெரிவித்துள்ளது. (ஐ)

## புற்றளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 21) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை வல்லைப் பகுதியில், மாட்டுடன் மோதி எதிரே வந்த ஓட்டோவுடனும் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொத்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் வீட்டில் இருந்து வந்து பிரதான வீதியில் கடை ஒன்றில் தேநீர் அருந்திவிட்டுச் சென்றபோது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரின் மீது மோதியது. அந்தக் கணத்தில் அவர் தூக்கி எறியப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## ஒரு லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்குள் மியான்மரைச் சேர்ந்த 116 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் (ரோஹிங்யர்கள்) நுழைந்துள்ளனர். எனவே, அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. படகுப் போக்குவரத்துக்காகப் பெருந்தொகைப் பணத்தை வழங்கிவிட்டே அவர்கள் மியான்மரில் இருந்து வெளியே றியுள்ளனர்.

பொலிஸார் முன்னெடுக்கும் விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களுக்கு அமைய அடுத்த சில நாள்களுக்குள் ஒரு இலட்சம் சட்டவிரோதக் குடியேறிகள் இலங்கைக்குள் நுழைவதற்குச் சாத்தியங்கள் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவர்கள் இலங்கைக்குள் வந்தால், அது எமக்கு பெரும் பிரச்சினையாகவே அமையும். எனவே, அது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்கள் தொடர்பில் தீவிரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.” - என்றார்.

## ஹயஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து ஏழாலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ஜெய்சங்கர் (60 வயது) என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து ஹயஸ்வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## 10 மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலோரப் பொலிஸ் படையினர் இலங்கைக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்துக்கு அப்பால் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்டறிந்த கடற்படை மற்றும் கடலோரப் பொலிஸ் படையினர் இந்திய மீன்பிடிப் படகைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## கோப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

இந்த விடயத்தை நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஓட்டோ சாரதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்திட்யசகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர், குற்றச் செயல்களுடன் தொடர்புடைய லொக்கு பெட்டி என்ற நபரின் உறவினர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், காயமடைந்த நபர் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் இல்லை என்பது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஞானசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஞானசார தேரர் கூறியிருந்தார்.

ஞானசார தேரரின் இந்தக் கூற்று இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் செயல் என்று குற்றம் சாட்டி குற்றவியல் சட்டத்தின் 291ஆவது பிரிவின் கீழ் பொலிஸார் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

## இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

."எவராக இருந்தாலும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள்." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

“அப்படியானவர்களுக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனையை தேசிய மக்கள் சக்தி அரசு வரவேற்கும்.” - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாத சிறைத்தண்டனையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று பிரதமரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2025 இல் வெளியிடப்பெற்றது.